(இ) எந்த ஊரில் ?

(உ) எவ்வளவு மூலதனம் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) & (c) Does not arise.

Lift Irrigation Scheme

*1272 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ம் வருஷம் ஜனவரி மாதம் 20-ம் தேதி சட்ட மன்றத்தில் 17-வது எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி திருத்துறைப்பூண்டி தாலூக்காவிலுள்ள லிப்ட் இரிகேஷன் திட்டம் பாக்கேஜ் டீல் மூலமாக எடுத்துக்கொள்ளப்படுமா ?

(இ) அப்படியானல் எப்போது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (1) No, Sir.

(2) Does not arise.

DEPUTY SPEAKER : I think Question No. 1273 may also be taken up and answered. After it is answered the hon. Member, Sri A. Vedarathnam can put the supplementary question.

1273 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த சபையில் 17-வது கேள்விக்கு 1961-ம் வருஷம் ஜனவரி மாதம் 20-ம் தேதியில் அளித்த பதிலையொட்டி Ford Foundation Package Deal மூலம் Filter Point கிணறுகளும் Bore Wells தோண்டவும் எத்தனை பவர் டிரில்கள் தஞ்சை ஜில்லாவில் வைக்கப்பட்டிருக்கின்றன ?

(இ) இதுவரை இத்தகைய கிணறுகள் எத்தனை தோண்டப்பட்டிருக்கின்றன ?

(உ) இத் திட்டத்தின் மூலமாக Lift Irrigation திட்டம் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா ? எத்தனை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Nil.

(b) & (c) Do not arise.

SRI A. VEDARATHNAM : பாக்கேஜ் டீல் அமுலில் உள்ள பிரதேசங்களில் இந்த லிப்ட் இர்ரிகேஷனை போர்ட் பவுண்டேஷன் எடுத்துக் கொள்ளும்படி நமது அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்திருக்கிறதா ? இல்லையெனில் அதைச் செய்ய முன்வருமா ? லிப்ட் இரிகேஷன் கூட சாத்தியம் இல்லாத இடங்களில் பில்டர் பாயின்ட் மூலம் இர்ரிகேஷனுக்கு கொடுக்க போர்ட் பவுண்டேஷன் உதவியை அரசாங்கம் நாட முன்வருமா ? அப்படியானல் இதன் விவரம் என்ன ?

19th August 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் சிற்சில அபிவிருத்தி வட்டாரங்களில் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. எல்லா வட்டாரங்களிலும் இது பூர்த்தி செய்யப்படும். இதல்லாமல் ஏற்கெனவே ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் திட்டம் என்றிருக்கிறது. அதன் கீழே லிப்ட் இரிகேஷன், பில்டர் பாயின்ட் போன்ற திட்டங்கள் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. எங்கெங்கு அவ்வாறு ஏற்கனவே நடத்தப்பட்டு வருகின்றதோ அவையெல்லாம் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்படும்.

SRI A. VEDARATHNAM: போர்ட் பவுண்டேஷன் மூலம் நமக்கு பவர் டிரில்கள் ஏதாவது கிடைத்திருக்கிறதா? நாம் கோரி அவர்கள் கொடுக்கவில்லையா, அல்லது நாம் கோரவேயில்லையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: போர்ட் பவுண்டேஷன் மூலம் பிரத்தியேகமாக பவர் டிரில்லைக் கோரவில்லை. இருப்பதை வைத்து நடத்திக் கொண்டு வருகிறோம்.

SRI R. SRINIVASA IYER: இந்த தீவிர சாகுபடித் திட்டம் காவேரி நீர்ப்பாசனம் இல்லாத ஏரியாவில் விஸ்தரிக்கப்படும் போது அங்கு ஆழக் கிணறுகள் தோண்ட அல்லது ட்யூப் வெல்ஸ் இன்ஸ்டால் செய்ய பாக்கேஜ் டீலில், ஏதாவது திட்டமிருக்கிறதா? இல்லையெனில் என்ன வகை செய்ய உத்தேசம்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் முன்பே விடையளித்தேன். ஏற்கெனவே எங்கெங்கு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றனவோ அப்பிராந்தியங்கள் இந்த தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும்போது ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட திட்டங்களும் இந்தத் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும்.

Government T.B. Sanatorium (Tambaram)

* 1274 Q.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

டி.பி. வியாதியால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு சிகிச்சை அளிக்க இன்ஸ்யூரன்ஸ் ஸ்கிமின்கீழ் தாம்பரம் சானிடோரியத்தில் அவர்களுக்கென்று தனியாக பிளாக்குகள் ஏற்படுத்த உத்தேசமுண்டா? விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes, Sir.

The Government have sanctioned the construction of two permanent wards of 26 beds each in the T.B. Sanatorium, Tambaram for the use of the insured workers under the Employees' State Insurance Scheme.

SRI V. K. KOTHANDARAMAN: தாம்பரம் சானிட்டோரியத்தில் பல துறைகளில் வேலை செய்யக்கூடிய சிப்பந்திகள், தொழிலாளர்களுக்கு ஏற்கனவே கட்டிடம் கட்டப்பட்டு சிகிச்சை அளிக்